
ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

உதவிப் பாதுகாப்பு அலுவலர் பதவி (ஒப்பந்த அடிப்படை)

பாதுகாப்புப் பணிகள் திணைக்களம்



உதவிப் பாதுகாப்பு அலுவலர் பதவிக்கு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச்செய்வதற்கு கருத்திற்கொள்ளப்படுவதற்கு பின்வரும் தேவைப்பாடுகளுடன் கூடிய முப்படைகளில் அல்லது இலங்கை பொலிஸ் விசேட அதிரடிப்படையில் நிரந்தர சேவையில் பணியாற்றியுள்ள தகைமைபெற்ற அத்துடன் அனுபவமுள்ள இலங்கைப் பிரசைகளிடமிருந்து இலங்கை மத்திய வங்கி விண்ணப்பங்களைக் கோருகின்றது.

1.0 பணி / பொறுப்புக்கள் :

- இலங்கை மத்திய வங்கியின் அனைத்து ஊழியர்களும் அவர்களது கடமைகளை சிறந்த மட்டத்தில் நிறைவேற்றுவதற்கு இயலச்செய்வதற்கான பாதுகாப்பான மற்றும் தீங்கற்ற சூழலை உறுதிசெய்தல்.
- சாத்தியமான அச்சுறுத்தல்களிலிருந்து இலங்கை மத்திய வங்கியின் ஊழியர்களை, வருகைதருபவர்களை, ஆதனங்களை மற்றும் சொத்துக்களைப் பாதுகாத்தல்.

2.0 குறைந்தபட்சத் தேவைப்பாடுகள் :

2.1 கல்வித் தகைமைகள் :

- க.பொ.த (சாதாரண தரப்) பரீட்சையில் ஒரே தடவையில் குறைந்தபட்சம் 6 சித்திகள்.
- க.பொ.த. (உயர் தரப்) பரீட்சையில் சித்தியடைதல் மேலதிக அனுகூலமாக கருதப்படும்.

2.2 உடலியல் தேவைப்பாடுகள் :

- உயரம் ஆண் : குறைந்தபட்சம் 165 செ.மீ (5′ 5″)
  பெண் : குறைந்தபட்சம் 162.5 செ.மீ (5′ 4″)
- எடை ஆண் : 20 < உடல் திணிவுச் சுட்டி < 27
  பெண் : 17 < உடல் திணிவுச் சுட்டி < 25
- மார்பளவு ஆண் : குறைந்தபட்சம் 81.3 செ.மீ (32″)

அபேட்சகர்கள் நாட்டின் எப்பாகத்திலும் எந்தவொரு களப் பணிகளையும் மேற்கொள்வதற்கான மருத்துவ, உடலியல் மற்றும் உள ரீதியாக பொருத்தமானவர்களாக இருக்க வேண்டும்.

2.3 வயது :

- ஆண்: 2026.11.23 அன்று 40 வயதிற்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்
- பெண்: 2026.11.23 அன்று 35 வயதிற்குக் குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல்

2.4 அனுபவம் :

- இலங்கை ஆயுதப்படைகளில் அல்லது இலங்கைப் பொலிஸ் விசேட அதிரடிப்படையில் நிரந்தர சேவையில் கறைபடியாத மற்றும் தொடர்ச்சியான சேவையுடன் குறைந்தபட்சம் ஆண்கள் 22 வருடங்கள், பெண்கள் 15 வருடங்கள் கொண்ட அனுபவம்.
- (விசேட படையணிகள், வெடிபொருள் ஆயுதங்களை அகற்றுதல் (EOD), பதவிநிலைப் பொறுப்பாளர், ஆயுதம் அல்லது உடற்பயிற்சிப் போதனாசிரியர், தீயணைப்பு மற்றும் பாதுகாப்பு, தொடர்பாளர், புலனாய்வு போன்ற) ஏனைய துறைகளில் விசேடத்துவம் பெற்றிருத்தல் மேலதிக அனுகூலமாக கருதப்படும்.

2.5 முப்படைகளில் / இலங்கைப் பொலிஸ் விசேட அதிரடிப்படையில் வகித்த பதவிநிலை :

- ஓய்வுபெற்ற இலங்கை தரைப்படை, கடற்படை அல்லது வான்படையின் நிரந்தர சேவையிலிருந்த சார்ஜன் / துணை அலுவலர் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் அதிகாரவாணையற்ற அதிகாரிகள் மற்றும் இலங்கை பொலிஸ் விசேட அதிரடிப்படையிலிருந்த சார்ஜன் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் உள்ளவர்கள்.

3.0 தொழில் :

- மூன்று (03) ஆண்டுகளுக்கு மேற்படாத காலப்பகுதிக்காக ஒப்பந்த அடிப்படையிலானது. ஒப்பந்தங்கள் தொடக்கத்தில் ஒரு (01) ஆண்டுக்காக கைச்சாத்திடப்பட்டு வங்கியின் தேவைப்பாடு மற்றும் தனிப்பட்ட செயலாற்றம் என்பவற்றின் அடிப்படையில் ஒவ்வொரு ஆண்டின் இறுதியிலும் அது மீளப்புதுப்பிக்கப்படும். ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும் அலுவலர்கள் இலங்கை மத்திய வங்கியின் நிரந்தர பதவியணியில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

4.0 ஊதியம் மற்றும் ஏனைய நன்மைகள் :

- ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் மருத்துவ நலன்கள் என்பவற்றுக்கான பங்களிப்புக்களுடன் ரூ. 100,000.00 கொண்ட அனைத்தையுமுள்ளடக்கிய வரி விதிக்கத்தக்க மாதாந்த ஊதியம்.

தெரிவுசெய்யப்படும் முறை

குறித்துரைக்கப்பட்ட குறைந்தபட்ச பிரமாணத்தை பூர்த்திசெய்யும் விண்ணப்பதாரர்கள் மேலதிக மதிப்பீட்டிற்காகத் தெரிவட்டணைப்படுத்தப்படுவர். எழுத்துமூலப் பரீட்சை/மதிப்பீடு, மருத்துவப் பரிசோதனை மற்றும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நேர்முகப்பரீட்சைகள் போன்றவற்றை இது உள்ளடக்கலாம்.

விண்ணப்பங்கள்

தேவைப்படும் தகைமைகள் மற்றும் அனுபவத்தைக் கொண்டுள்ள அத்துடன் மேற்குறித்த பதவிக்கு விண்ணப்பிப்பதற்கு விரும்புகின்ற இலங்கை பிரசைகள் குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

https://www.cbsl.gov.lk/en/careers

குறித்துரைக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினையே பயன்படுத்துமாறு விண்ணப்பதாரிகள் கண்டிப்பாக அறிவுறுத்தப்படுகின்றனர் என்பதுடன் உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்களை வேண்டப்பட்ட அனைத்து ஆவணங்களுடனும்
(அதாவது, பிறப்புச் சான்றிதழ், தேசிய அடையாள அட்டை, க.பொ.த. (சா/த.) மற்றும் (உ/த.) சான்றிதழ்கள், முப்படைகளின் சேவைப் புத்தகம் / இலங்கை பொலிஸிடமிருந்து சேவைக் கடிதங்கள், ஏனைய தகைமைகள், பயிற்சி நிகழ்ச்சித்திட்ட சான்றிதழ்கள் மற்றும் ஏனைய தொடர்புடைய ஆவணங்கள்.)

2026.11.23 அன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் மூலம் மனித வளங்கள்/பணிப்பாளருக்கு கிடைக்கும் விதத்தில் பின்வரும் முகவரிக்கு அனுப்புமாறும் வேண்டப்படுகின்றனர்.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “உதவிப் பாதுகாப்பு அலுவலர் (ஒப்பந்த அடிப்படை) பதவிக்கான விண்ணப்பம்” எனத் தெளிவாகக் குறிப்பிடப்படல் வேண்டும்.

இறுதித் திகதியன்றுள்ளவாறு குறைந்தபட்சத் தேவைப்பாடுகளைக் கொண்டிராதவர்கள் இந்தப் பதவிக்காக விண்ணப்பிப்பதற்கு தகைமையற்றவர்களாவர். இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் அல்லது குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்திசெய்யாத அல்லது பரிந்துரைக்கப்பட்ட படிவத்தில் சமர்ப்பிக்கப்படாத எந்தவொரு விண்ணப்பமும் ஏதேனும் அறிவிப்புமின்றி நிராகரிக்கப்படும்.

நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் நடாத்தப்படும் சான்றிதழ் உறுதிப்படுத்தலின் போது தொடர்புடைய மூல ஆவணங்களைச் சமர்ப்பிக்கத் தவறுகின்ற அபேட்சகர்கள் எக்காரணத்தின் கீழும் தகைமையுடைய அபேட்சகர்களாகக் கருத்திற்கொள்ளப்படமாட்டர்.

எந்தவிதத்திலேனும் ஆதரவு தேடுதல் தகைமையிழக்கச் செய்யும். பதவிகளை நிரப்புவதற்கான எண்ணிக்கையைத் தீர்மானிப்பதற்கான அல்லது ஆட்சேர்ப்பினைப் பிற்போடுவதற்கான அல்லது இரத்துச் செய்வதற்கான உரிமையை இலங்கை மத்திய வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. தெரிவட்டவணைப்படுத்தப்படும் அபேட்சகர்கள் மாத்திரம் ஆட்சேர்ப்புச் செயன்முறையின் அடுத்த கட்டத்திற்கு தொடர்புகொள்ளப்படுவர்.

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரிவுகள் தெரிவுசெய்யப்படும் அனைத்து அபேட்சர்களுக்கும் ஏற்புடையதாதல் வேண்டும்.

பணிப்பாளர் – மனித வளங்கள்
இலங்கை மத்திய வங்கி, இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01
தொலைபேசி: 011-2477330 தொலைநகல்: 011-2477715